**யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2019**

யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 3603 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் 3604 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. யாழ்ப்பாணம் தீபகற்பக பகுதி, நகர மற்றும் புறநகர் பகுதிகளில் வசிப்பவர்களை இலக்கிட்டு பாதுகாப்பான குடிநீர் நுழைவுகளை முன்னேற்றுவதற்கான ஆரம்ப யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தை மீள்கட்டமைப்பதற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,256 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153 மில்லியனானதுடன் அதில் ரூபா 18,240 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு கணப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 5,016 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 திசெம்பர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 1.33 மில்லியன வட்டிக் கட்டணங்கள் மற்றும் ரூபா 44.68 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்கள் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கைதவிர்பு குறைத்துக் கூறல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு கொள்கை தீர்மானத்திற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பிற்கான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆதலால், அந்த கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் 2019 ஆண்டிற்கான அதன் ஏடுகள் மற்றும் அறிக்கைகளில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் மொத்த கைதவிப்புகளும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரர் மற்றும் யாழ்ப்பாண நகரத்தில் விநியோக வலையமைப்பக்களின் குழாய்கள் வழங்கி பொருத்தவதற்கான | செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் தாமதப்படல். | கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறி (SWRO) நிர்மாணிப்பதற்கான கேள்வி 2016 திசெம்பர் 07 இல் கோரப்பட்டிருந்ததுடன் 2017 யூவை 17 இல் முடிவுறுத்தப்பட்டது. 2017 யூலை 17 இல் தொழில்நுட் கேள்வி திறக்கப்பட்டதுடன் 2018 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கியிருக்க வேண்டும். |

ஒப்பந்தகாரர் முறையே 3 ஆண்டுகள் மற்றும் 1 ஆண்டின் பின்னர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 2020 ஒக்தோபர் 19 வரையும் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவு கைநூல் 2006 இன் குறைநிரப்பு இல. 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் முன்தகைமைகளுடன் 17 வாரங்களிற்குள் போட்டி கேள்வி நடைமுறைகளின் கொள்வனவு நடைமுறை பூர்த்தியுாக்கப்படல் வேண்டும்.

யூலை 31 இல் நிதிக் கேள்வி திறக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2020 ஆகஸ்ட் 31 வரையான கொள்வனவு செயற்பாடுகளின் போது கேள்வியாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான தெளிவுபடுத்தல்களை பெறுவதற்காக 89 நாட்கள் எடுத்திருந்தது. ஆலோசனை உதவி மற்றும் மீளாய்விற்காக 41 நாட்கள் எடுத்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பாய்விற்காக 151 நாட்கள் TEC மதிப்பாய்விற்கு எடுத்திருந்தது. SCAPC தீர்மானங்களிற்காக 379 நாட்கள் எடுத்திருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்து மற்றும் ஒத்துழைப்பை பெறுவதற்கு 181 நாட்கள் எடுத்திருந்தது. அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பதற்காக 201 நாட்கள் வரைபு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதற்காக எடுத்திருந்ததுடன் மேன் முறையீட்டிற்காக 99 நாட்கள் எடுத்திருந்தது. JMC விநியோக முறைமையில் யாழ்ப்பாண நகர விநியொகத்தின் முறைமையின் வழங்கல் மற்றும் குழாயிடலிற்கான வரைவு அமைச்சரவை விஞ்ஞாபனம் 2020 யூன் 15 இல் சமர்ப்பிக்கப்பட்டது. செயற்திட்டமானது அமைச்சரவை அனுமதிக்காக காத்திருக்கின்றது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| நடவடிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பாரக்கப்பட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் | | | |
| கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் | ஒப்பந்தம் 2021 ஒக்தோபரில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெ பட்டியலிடப்பட்டது. | ஒப்பந்தமானது 2020 நவம்பர் 30 வரையும் வழங்கப் பட்டிருக்கவில்லை. | யாழ்ப்பாண குடா நாட்டில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குவதில் தாமதம் | செயற்திட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திருத்திய கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் 2020 இறுதியளவில் கடல் நீர் மீள்சுத்த பொறி நிர்மாண ஒப்பறத்தத்தை வழங்குவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கின்றன. | பட்டியலிடப்பட்டவாறு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான கடன் பெறுகைகளின் கீழ் ரூபா 18,240 மில்லியன் தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த பொதிலும் செயற்திட்டத்தின் மெதுவான பௌதீக முன்னேற்றம் காரணமாக மீளாய்வாண்டு இறுதி வரையில் ரூபா 175.16 மில்லியனிற்கு சமமான | இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக கிரயம் ஏற்படும். | செயற்திட்ட றிர்வாக கைநூலின் (PAM) பின்வரும் ஒப்பந்த பொதிகள் மேலதிக நிதியளிப்பில் உள்ளடக்கப்பட்டன.<br>1. SWRO சுத்திகரிப்பு பொறி கூறு.<br>2. JMC விநியோக முறைமை.<br>3. தண்ணீர் கோபுரங்கள் மற்றும் விநியோக முறைமை 2.<br>4. விநியோக முறைமை (2 மேலதிகமாக) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கடப்பாட்டுக் கட்டணங்களை குறைத்தல் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேரம்பேசலிற்கு வேண்டப்பட்டுள்ளது. |

ஐ.அ.டொலர் 0.97 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதிகளின் மெதுவான பயன்படுத்தலின் விளைவால், 2019 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் ரூபா 44.68 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

விநியோக வலையமைப்பு 02 பொதி (DN02) 2018 ஒக்தொபர் 29 இல் வழங்கப்பட்டுள்ளதுடன் நிர்மாண வெலைகள் செயற்பாட்டில் உள்ளன. இது மேலதிக நிதியளிப்பின் குறிப்பிடத்தக்களவு நிதி முன்னேற்றத்தை காட்டுகின்றது.

JMC விநியோக முறைமையில் யாழ்ப்பாண நகர விநியொகத்தின் வரைவு அமைச்சரவை விஞ்ஞாபனம் 2020 யூன் 15 இல் சமர்ப்பிக்கப்பட்டது. செயற்திட்டமானது அமைச்சரவை அனுமதிக்காக காத்திருக்கின்னது.

மேலதிக நிதியளிப்பில் SWRO சுத்திகரிப்பு பொறி பிரதான கூறாக உள்ளது. SWRO ஒப்பந்தம் கொள்வனவு நடைமுறை செயற்பாடு காரணமாக வழங்க்பட்டிருக்கவில்லை.

இதன் விளைவால், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 வரையும் எதிர்பார்க்கப்பட்ட நிதி முன்னேற்றத்தை அடைவதற்கு இயலாதிருந்தது. நாட்டிற்குரிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட பின்னர் செயற்திட்டமானது 2020 இல் குறிப்பிடத்தக்களவு பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தைக் காட்டும் என்பது எனது பணிவான கருத்துக்களாகும்..

*M*